REGISTERED No. M ... 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 FEB 1956
MADRAS

1132

# FATH-HUL-ISLAM

# பத்ஹுல் இஸ்லாம்

மாத பத்திரிகை

1132
1-56

மார்ச்சு 1956.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| இறைவனை அறிந்து வணங்குவோம் வாரீர் ... ... | 1 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... | 9 |
| 'டெலிவிஷன்' என்னும் நவீன 'மாய தர்சினி' சிறுவர் பகுதி (டி. எம். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி) ... ... | 15 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... | 21 |
| அன்ன பலக்கால் முன்னேறியவர் (... முஹம்மது காஜுது) ... ... | 27 |

... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

SL
Q7ஹ211/K124FC
N56.
187050

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## அறபு தஃலீமுல் புர்கான் பீ
## எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தை குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஓஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப்பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு பாகங்கள் சேர்ந்தது.

விலை அணா. 6

எஸ்ஸர்னல் குர்ஆன் லாஹூர் ஸைடல் பெரியது

விலை அணா. 10

ஷெ சிறியது விலை அணா. 6

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

‘பத்ஹுல் இஸ்லாம்’

மார்ச்சு—1956.

# இறைவனை அறிந்து வணங்குவோம் வாரீர்!

**நாம்** அல்லாஹு தஆலாவை தினமும் புகழ்ந்து ஸ்தோத்தரித்து வணங்குகின்றோம்; அவன் சர்வ லோகங்களுக்கும் இரக்ஷகன், அருளாளன், அன்புடையோன், மறு லோகத்து நியாயத்தீர்ப்பு நாளுக்கு அதிபதி என்றெல்லாம் அப்பரம கருணாநிதியான ஏக வல்ல அல்லாஹ்வின் பெருமைகளைக் கூறி வணங்குகின்றோம். அவனிடமே உதவி தேடுகின்றோம். சுகத்தில் அவனை போற்றிப் புகழ்ந்து நன்றி செலுத்துகின்றோம்; துக்கத்தில் அவனையே வேண்டி, குறை இறைந்து சகாயம் வேண்டிக் கொள்கின்றோம். நோய் ஏற்பட்டு உடல் நலம் கெட்டு, மனோ-தேக வேதனை யுண்டானால் ஒவ்வொரு முஸ்லிமும் “யா அல்லாஹ்! யா அல்லாஹ்” என்றே வேண்டிக் கொள்கின்றோம். ஏதேனும் ஆபத்து ஏற்பட்டாலும் ஏதேனும் சங்கடம் வந்தணுகினாலும் நாம், “யா அல்லாஹ்” என்றே அழைத்து உதவி வேண்டுகின்றோம்.

முஸ்லிம்களின் தோற்றம் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கிறது? இது விஷயத்தில் ஏகோபித்த பழக்க வழக்கம் உலகில் காணப்படவில்லை; முஸ்லிம்கள் தோற்றத்திலும் கோலத்திலும் இப்படித் தான் இருக்க வேண்டுமென்று வரையறுத்துக் கூற எவராலும் முடியவில்லை; இமாம்களும் முஹத்திஸ்களும் இஸ்லாமியத்

தலைவர்களும் இதற்கு சுமுகமான முறையில், எல்லோருக்கும் ஏற்ற முறையில் வழிகாட்ட இயலவில்லை. ஆம், உடையும் தோற்றமும் ஒரே விதமாய், ஒரே ஒழுங்காய், ஒரே ரீதியாய் இருக்க வேண்டு மென்றால், அதற்கு உலகப் பிரதேச இயற்கையும் சீதோஷ்ணமும் தேசபாஷா பழக்க வழக்கங்களும், தேசீய வரம்புகளும் இடம் தரவில்லையே, என்ன செய்வர் ?

ஆகையினால் தான் அரபு தேச முஸ்லிம் மக்களின் உடை ஒரு வகையாகவும், இந்தியா தேசத்து இஸ்லாமிய மக்களின் உடை ஒரு வகையாகவும் இருந்து வருகிறது. பாஷைகளும் வெவ்வேறாகவே இருந்து வருகிறது. தினசரி வாழ்க்கை முறைப் பழக்க வழக்கங்களும் வெவ்வேறு தான். அவர்கள் உண்ணும் முறை, உடுக்கும் முறை, உறங்கும், முறை இல்லறம் நடத்தும் முறை, வெளியுலகில் பிறமதத்தாருடன் கலந்துறவு பூண்டு வாழும் முறை-எல்லாம் வெவ்வேறாகவே இருந்து வருகின்றன. இது தான் இயற்கைக்கும் செயற்கைக்கும் பொருந்தியதாய் இருந்து வருகிறது. நாட்டுக்கும் நாட்டுப் பழக்க வழக்கத்துக்கும் இது தான் ஏற்றமைந்ததாய் இருக்கின்றது.

அரபு தேசத்தி லிருக்கும் முஸ்லிமை, ஐரோப்பா தேசத்தில் வசிக்கும் முஸ்லிமைப் போல் உடை உடுத்துக் கொள் என்றால் கேட்பானா? ஐரோப்பா தேசத்தி லிருக்கும் முஸ்லிமை, ஆப்ரிக்கா தேசத்திலுள்ள முஸ்லியைப் போல் உடுத்துக் கொள் என்றால் கேட்பானா? இதே மாதிரி தான், நம் முஸ்லிம்கள் உலக மெல்லாம் பரவி வியாபித்து விசாலமாய் வாழ்ந்து வருவதால், அவர்களை நடையுடைபாவனையில் ஒரே மாதிரியாக இருக்கச் செய்வ தென்பது இயற்கைக்கும் செயற்கைக்கும் பொருந்தாத விஷயமாக—மகாப் பிரச்னையாக இருந்து வருகிறது.

ஆனால் ! உலகத்தின் எந்த தேசத்து முஸ்லிமாயினும் எந்த பாஷைக்கார முஸ்லிமாயினும் எத்தகைய நடையுடை பாவனைக்கார முஸ்லிமாயினும் எத்தகைய உணவாகாரம் கொள்ளும் முஸ்லி மாயினும் எத்தகைய தேக நிறம்-சரீரத் தோற்றமுடைய முஸ்லி மாயினும், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் மிக ஒற்றுமையும் மிகுந்த கட்டுப்பாடும் ஏகோபித்த மனப்பாங்கும் ஒரே விதமான பண்பாடும் உடையவனாக காணப்படுகின்றான். அதென்ன வென்றால்:

"லா இலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்"

என்ற தூய கலிமாவை ஓதி, இறைவனின் உண்மையை மனத்தில் இருத்திக் கொண்டு, பரிசுத்த ஈமான் கொண்டு, அவ்வேக வல்லோனாகிய அல்லாஹ்வையே தன்னுடைய பக்தி வணக்க ஒழுக்கத்துக்குப் பாத்யதை உடையவனாக்கித் தொழுவதில், எந்த நாட்டு முஸ்லிமுக்கும் எந்த பாஷைக்கார முஸ்லிமுக்கும், எந்த நிறத்தோற்றமுடைய முஸ்லிமுக்கும் லவலேசமும் வித்தியாசமும் கிடையாது.

இதே மாதிரியே, தங்கள் இஸ்லாமிய சன்மார்க்கத்துப் பரம வழிகாட்டியாகவும் அல்லாஹ்வின் திருத் தூதராகவும் சத்திய சன்மார்க்கப் போதகராகவும் இருக்கத் தக்கவர்-போற்றத்தக்கவர்-பின்பற்றத்தக்கவர்-நமூனாவானவர் அந்த முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே யாவர் என்பதிலும் யாருக்கும் விகல்பம் இல்லை.

இவ்வாறே, இஸ்லாமியத் தூய சத்தியத் திருமறையாகிய குர்ஆன் ஷரீபை, அதன் சுய பாஷையாகிய அரபு மொழியிலேயே இனிமையோடு, சப்த பேத மில்லாமல், இலக்கண வழுவில்லாமல் ஓதிப் பாராயணம் என்னும் 'திலாவத்' செய்வதிலும், உலக முஸ்லிம்களில் எந்நிறத்தாருக்கும் எம்மொழியார்க்கும் எந்நாட்டார்க்கும் கிஞ்சித்தும் வித்தியாசமில்லை.

இங்ஙனமே, இஸ்லாமிய ஷரீஅத்துக் கட்டளைப் பிரகாரம்—

"அல்லாஹு அக்பர்; அல்லாஹு அக்பர்"

என்ற அரிய பாங்கொலியை, பகிரங்கமாய் எல்லோரும் கேட்கும் வண்ணம், தினமும் ஐந்து நேரமும் 'அதான்' என்ற பெயரால் மஸ்ஜிதின் மிம்பர்-மினார் மீது நின்று முழங்குவதிலும், எத்தேச முஸ்லிமுக்கும் எப்பாஷை முஸ்லிமுக்கும் எந்நிற முஸ்லிமுக்கும் வித்தியாசமில்லை. சுருங்கக் கூறுமிடத்து:

உலக முஸ்லிம்கள், கலிமா சொல்வதிலும், ஈமான் கொள்வதிலும், குர்ஆன் ஷரீப் ஓதிப் பாராயணம் செய்வதிலும், பாங்கு முழங்குவதிலும், இமாமத்துச் சொல்வதிலும், பஜ்ரு-லுஹர்-அஸர்-மக்ரிப்-இஷா என தினமும் ஐந்து வேளை குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பான விசேஷ முறைப்படி, பர்லு-சுன்னத்து-வாஜிப் எனத்

தொழுகை வணக்கம் நிறைவேற்றுவதிலும் ஜகாத்து கொடுப்ப திலும், ரமலான் மாதம் நோன்பு நோற்பதிலும், ஹஜ்ஜு செய்வ திலும் எந்த தேசத்து முஸ்லிமுக்கும் எந்த நிறத்து முஸ்லிமுக்கும் எந்த மொழிக்காரமுஸ்லிமுக்கும் விசேஷமான வித்தியாசம் இல்லவே இல்லை.

உதாரணமாய்: தமிழ்நாட்டுத் திருநெல்வேலிக்கார முஸ்லி மொருவர், ஏதோ காரியார்த்தமாய் அசல் அரபு தேசமாகிய மக்கா அருகிலுள்ள 'ரியால்' என்னும் பிரதேசத்துக்குப் போய்விட்ட போதிலும் சரி, தொழுகை நேரம் வந்து விட்டால் அங்கு சொல்லப் படும் 'பாங்கு' வாக்கியங்கள் தன் தமிழ் நாட்டில் சொல்லப்பட்ட பாங்கு வாக்கியங்கள் போல்தா னிருப்பதை இனிது இலேசில் உணர்ந்து கொள்வான். இங்கு முஸ்லிம் ஜமாஅத்து கூடி பள்ளி வாசலில் ஸப்பு கட்டி அணியாக நின்று தொழுது கொண்டிருப் பதைப் போலவே அங்குள்ள மஸ்ஜிதிலும் அரபு முஸ்லிம்கள் பாங்கு சப்தம் கேட்டதும், தங்கள் வியாபாரம் கொள்வினை கொடுப்பினை யாவற்றையும் விட்டு மஸ்ஜிதுக்கு வந்து, ஜமாஅத்து கூடி, இமாமுக் குப் பின்னால் நின்று தொழுது கொள்வதை பிரத்தியக்ஷமாய் கண்டு, தானும் ஒரு முஸ்லிம் என்ற முறையில் சமத்துவமும் சகோதரத் துவமும் பூண்டு, அத்தொழுகையில் அந்த இமாமுக்குப் பின்னால் ஒரு 'முக்ததீ' யாக நின்று தாராளமாகத் தொழுது கொள்வான்.

இதேமாதிரி, முஸ்லிம்கள் எத்தேசத்தினராயினும் எந்நிறத்தின ராயினும் சரியே "அஸ்ஸலாமு அலைக்கும்" "வஅலைக்கு முஸ்ஸலாம்" என்று பரஸ்பரம் ஸலாம் கூறிக்கொண்டு க்ஷேம நலம் விசாரித்துக் கொள்வதிலும், விருந்துகளில் கலந்து சரிசமமாய் இருந்து உண வருந்துவதிலும், அவசியப்பட்டால் அந்நாட்டுப் பெண்ணை இஸ்லா மிய ஷரீஅத்துச் சம்பிரதாய முறைப்படி 'நிக்காஹ்' செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்துவதிலும் எவ்வித வித்தியாசமும் காண மாட்டான்-அரபு தேசத்தில் வதிய நேரிட்ட அந்தத் தமிழ் நாட்டு முஸ்லிம் எளியோனும்.

ஆஹா! இஸ்லாத்தின் மகிமை என்னே! அல்லாஹ்வின் கிருபா கடாக்ஷம் என்னே! நபிகளுயகம் முஹம்மத் (ஸல்) உலகத்துக்குப் பேரருளாக-ரஹ்மத்துன் லில்ஆலமீனாக விஜயம் செய்தருளியதின் மகிமைதான் என்னே!

தீனுல் இஸ்லாம் என்னும் சுத்த சத்திய சன்மார்க்கப் பெரும் பாக்கியம், முஸ்லிம்களாகிய நம்மவர்கட்கு கிடைத்ததற்காக நாமெல்லோரும், எல்லாம் வல்ல அந்தப் பரம கருணாகரனாகிய அல்லாஹுதஆலாவை சதா சர்வகாலமும் போற்றிப் புகழ்ந்து துதித்து வணங்குவோமாக. இன்னும் பிரபஞ்ச அருள் பிழம்பாகிய முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய அருஞ்சீரிய சுன்னத்தைப் பின்பற்றி நடந்து ஒழுகி, நற்பயனும் நற்பாக்கியமும், இறைவனின் அருள் என்னும் ரஹ்மத்தும் பெற்று இகத்திலும் பரத்திலும் உய்வோமாக.

சோதரீர்! முஸ்லிம்களாகிய நம்முடைய கடமை இத்துடன் தீர்ந்துவிடவில்லை. "லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்று கலிமா சொல்லி ஈமான் கொள்வதும், முஸ்லிம் சகோதரர் ஒருவரை ஒருவர் கண்டு 'அஸ்லாமு அலைக்கும்-வ அலைக்கு முஸ்ஸலாம்' என்று சாந்தி மொழிக் கூறி க்ஷேம நலம் விசாரித்துக் கொள்வதும், "அல்லாஹு அக்பர்... ஹய்ய அலஸ்ஸலாத்..." என்று பாங்கு சப்தம் கேட்டதும் மஸ்ஜிதுக்குள் போய் ஜமாஅத்துடன் சேர்ந்து கொள்வதும், ஜாதி, நிற, மொழி வித்தியாசமின்றி நிக்காஹ் செய்து கொண்டு பரஸ்பரம் கலந்து உறவு பூண்டு வாழ்வதும் போதுமா? இதுமட்டுமா இஸ்லாம்; இதுமட்டுமா ஈமான்; இது மட்டுமா இபாதத்; இது மட்டுமா ஹக்கீகத்!

"நம் வணக்கத்துக்குரியவன் அல்லாஹுவைத் தவிர்த்து வேறு தெய்வம் ஏதும் இல்லை" என்று கலிமா தய்யிபாவில் ஓதி, மனத்துள் உறுதி கொண்டு ஈமானுடையவர்களா யிருக்கின்றோம்.

இன்னும் தொழுகைக்காக நான்போய் 'முஸல்லா' வில் நின்றதும் "நிச்சயமாக நான், பூமியையும் வானத்தையும் படைத்து விரித்து விதான மாக்கிய இறைவனின் திருமுகம் முன்னோக்கி (தொழுகை நிறைவேற்றுபவனாக) இருக்கின்றேன்" என்று நிய்யத்துக்கு முன் ஓதுகின்றோம்.

இன்னும், "இறைவனே, நாம் உன்னையே வணங்குகிறேன்; உன்னிடமே (சகலத்துக்கும்) உதவி வேண்டுகிறேன்" என்று பிரார்த்தித்து உறுதி கூறுகின்றோம்.

இன்னும் "இரக்ஷகனே! எல்லாப் புகழும் உனக்கே உரியன; எனது இரக்ஷகன் மகா உயர்தரமானவன்; என்னுடைய இரக்ஷகன்

மகா மகிமையுடையவன்'' என்றெல்லாம் தொழுகையில் நாம் ஓதிப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாவதாக நாம் இறைவனை முன்னோக்குகின்றோம்; அவன் திருச்சமுகத்தில் பணிவுடன் நின்று கையேந்தி இறைஞ்சுகின்றோம்; அவனுக்கு சிரம் பணிந்து குனிந்து வணங்குகின்றோம்; அவனொருவனுக்காக சரீரத்து அஷ்ட அங்கங்களும் பூமியில் படும்வண்ணம் மண்டியிட்டு மிகப்பணிந்து, 'ஸஜ்தா' செய்கின்றோம். இங்ஙனம், நமது இறைவனும் இரக்ஷகனுமாகிய அல்லாஹு தஆலாவின் எதிரில் நின்றும், குனிந்தும், பணிந்தும், இருந்தும், எழுந்தும் வணக்கம் என்னும் தொழுகை நிறைவேற்றுகின்றோம். ஆம்! இஸ்லாமியத் தொழுகையாகிய நம்மவர்களின் வணக்கப் பிரார்த்தனை போல், வேறெம் மதத்திலும் அத்துணை பரிபூர்ணமானதாய் அது அமையவில்லை என்பது வாஸ்தவம். இதர மதங்களில் யோகம் என்ற பெயராலோ, ஆசனம் என்ற பெயராலோ, கும்பிடுதல் என்ற பெயராலோ, மண்டியிடுதல் என்ற பெயராலோ, நமஸ்கரித்தல் என்ற பெயராலோ ஏதோ ஒரு விதமான வணக்கமுறைதான் இருக்கிறது. ஆனால்நமது தீனுல் இஸ்லாத்தின் 'ஸலாத்' என்னும் தொழுகையில், எல்லாவிதமான சாஷ்டாங்க நமஸ்காரமும், சகல விதமான யோகாசன முறைகளும், பரிபூரணமான சுவாசப்பியாஸ பரிணமமுறைகளும் அடங்கியிருக்கின்றன. தபசிகளும் முனிவர்களும் ரிஷிகளும் காட்டிற்கும் மலைக்கும் சென்று, பற்பலவிதமான ஆஸனங்கள் செய்து, கஷ்டப்பட்டும் அடையாமற் போகும் பெரும் பயன்களை முஸ்லிம்களாகிய நாம், நம் இஸ்லாமிய தொழுகையில் கியாம், ருகூவு, ஸஜ்தா, கஃதா முதலிய நிலைகளிலேயே அடைய முடிகிறது.

சர்வசாதாரணமாக அல்லாஹு தஆலாவை நாம் நேரில் பார்த்ததில்லை; அத்தூய பரம் பொருளை சரீரக் கண் கொண்டு பார்க்கவே முடியாது. ஆனால் ஹிருதயமென்னும் பீடத்தில் அப்பரம் பொருளை இருத்தி, மனக்கண் கொண்டு பார்த்து நலம்பெற முடியும்? ஆகவே தொழுகையின் போது நாம் "ஆண்டவன் முன்னிலையிலேயே அவனுடைய திருச்சமுகம் என்னும் தர்பாரிலேயே நிற்கின்றோம், பணிகின்றோம் என்று திடமான மனத்துடன், நிஷ்களங்கமான உள்ளத்துடன், தூய பக்தி விசுவாசத்தில் 'யக்கீன்' என்னும் உறுதி கொள்ளவேண்டும்.

அல்லாஹு தஆலாவை நாம் நம் கண்கொண்டு பார்க்கமுடியவில்லை என்பதற்காக, அவ்வல்லோனும் நம் செயல்களைப் பார்க்காமல் இருந்து விடுகிறான் என்று சில அவிவேகிகள் எண்ணிக்கொள்ளலாம். நாம் அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறானென்பதில் கொஞ்சங்கூட ஐயம் கூடாது. அங்ஙனம் ஆண்டவன் துலக்கமாய் நம்மை பார்த்துக்கொண்டிருக்கும் போது, நாம் வெறும் சம்பிரதாயச் சடங்கு போல் தொழுதுவிட்டு வருகிறோமே, அது எங்ஙனம் பொருந்தும்!

"நீங்கள் எங்கு, எந்நிலையில் இருந்த போதிலும் இறைவன் உங்களுடனேயே இருக்கின்றான்"

"இறைவனாகிய நாம், அடியானின் பிடரி நரம்பைக் காட்டிலும் மிக அருகிலேயே இருக்கின்றோம்"

"நீங்கள் எந்தத் திசையில் முன்னோக்கி யிருந்த போதிலும் அங்கெல்லாம் இறை வதனம் காண்பீர்கள்"

இதெல்லாம், அரபு வாக்கியம், குர்ஆன் திருமொழிகளின் உட்கருத்தாகும். சோதரீர்! இறைவனை வணங்கும் விதத்தை சிரத்தையுடன் அறிவோமாக! 'நம்மை இறைவன் பார்த்துக்கொண்டிருக்கின்றான்; இறைவனை நாம் நேரிலேயே பார்த்துக்கொண்டிருக்கிறோம்' என்ற திடமான நிச்சயத்தோடு, அவனை வணங்கித் தொழுது 'இபாதத்து' செய்வோமாக. "தன்னைத்தான் எவன் உணர்வானோ அவனே தன் இறைவனை யுணர்வான்" என்ற ஹதீது முதுமொழியை சிந்தியுங்கள். இறுதியாய், சோதரீர்! இறைவனை அறிந்து வணங்குவோம், வாரீர்! வஸ்ஸலாம்.

# முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயக மவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளை கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ் தஹிதீன்களும் தெண்டித்து விபரித் தெழுதி யிருப்பவை களில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வை யிட்டு அச்சிடப் பட்டது. இவைக ளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக் கின்றன.

பின்பு இவைக ளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக் கின்றன.

இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 12

# மிஃருஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

"மிஃருஜுல் ஆரிபீன்" என்பது பதினான்கு இல்முகளுக் கும் ஓர் அலை கடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத் துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னுங் கிரந்தத்தி லிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் 'மஃறிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகு பாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித் தெழுதினாலும் முடியாது. கோட்டமிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்.

சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4

அரபுத் தமிழ் றப்பு காகிதம் கலிகோ பைண்டு ரூ. 4—6—0

(அச்சாகிறது)

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 23—வது பகுதி)

### 43-வது அத்தியாயம்.

**ம**றுநாள் மந்திரியின் விருந்துக்கு டாமும் சென்றான். இந்த கேஸில் முக்கியமானவளான குலோரியாவும் வந்திருந்தாள். சாப்பாட்டிற்குப் பின் பென்டன் பேசத் தொடங்கினர்.

"நீங்கள் நன்றாக கவனிப்பீராயின், நாம் இந்த இரத்த சின்ன சங்கக் கொலைகள் நடைபெறுவதற்கு முன் இந்த ஸிம்ஸனைப் பற்றி கேள்வி படவே யில்லை. அவன் இங்கு ஒரு துப்பறிபவனாகவும் தனக்கு ஏதோ பிரத்தியேக சக்தி யிருப்பதாகவும் எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் பண்ணினன். இருந்தாலும் அவனிடம் ஒரு கேஸுகூம் வரவில்லை. அவனும் எதிர்ப்பார்க்க வில்லை. ஏனென்றால் இந்த சங்க வேலையே சரியாக இருந்திருக்கும். இரத்த சின்ன சங்கத்தின் முதல் கொலை நடந்த பின் ஒரு பத்திரிகை ஆபீஸில் அவனைக் கூப்பிட்டு அவனது பிரத்தியேக சக்தியைக் கொண்டு இந்த கொலை செய்தவனைக் கண்டு பிடிக்கும் வேலையைக் கொடுத்தனர். கொலை எப்படி நடந்தது? யார் செய்தது? என்பதைப் பற்றி ஸிம்ஸனுக்கு தெரியாமல் வேறு யாருக்கு தெரியும்? அவன் கொலை செய்த ஆயுதத்தைக் கையில் வைத்து, தனது சக்தியைக் கொண்டு கண்டு பிடிப்பது போல், 'கொலை செய்தவன் கருப்பு நிறமுள்ளவன். இன்னவிடத்திலிருக்கிறான்' என்று சொல்லவே, அவ்வாறு அவன் சொல்லிய இடத்தில் கருப்பு நிறமுடையவன் ஒருவனிருந்து, கொலை செய்ததையும் ஒப்புக் கொள்ளவே, ஸிம்ஸனின் பெயர் பிரபல்யமாயிற்று. இனி யாருக்கு இரத்த சின்ன சங்கத்தின் மிரட்டல் கடிதம் கிடைக்கிறதோ, அவரே தன்னை வேலைக்கு அமர்த்தக் கூடுமென்றும் ஸிம்ஸனுக்கு தெரியும். அவ்வாறாயின் கூடவேயிருந்து இரத்த சின்ன சங்கத்தைப் பற்றி பரிந்து பேசி, அது மிக கெட்ட கூட்ட மென்றும் அவர்கள் கேட்கும் தொகையை கொடுத்து விடுவதே நலமென்றும் மெதுவாக தெரிவிக்க வசதியு முண்டு. அப்படி சொல்லியும் கொடுக்காவிடில் அருகே யிருப்பதால் கொலை செய்யவும் வசதி ஏற்படுகிறது"

"கிரீன் இறந்திருக்க வேண்டியதே யில்லை. ஸிம்ஸனின் கையால் கொலை யுண்டதற்குக் காரணம் அவரேதான். தனது பணம்

போய்விடவே, அதை எவ்வாறும் கண்டு அடைய வேண்டுமென்று தனியாக, கோட் நம்பர் மூலம் விசாரணை செய்தார். அந்த விசாரணையின் மூலம் இந்த ஸிம்ஸனே இரத்த சின்ன சங்கத்தின் தலைவனென்றும், இவர் பிரான்ஸில் ட்ரம்மண்ட் என்ற பெயரை யுடையவனென்பதையும் கண்டு பிடித்தார். தான் கண்டு பிடித் ததை தெரிவிக்க, எங்களை தருவித்திருந்தார்."

"அவர் கொலையுண்டதைப் பற்றி நீங்கள் பத்திரிகையில் நன் ருக படித்திருப்பீர்கள். கமிஷ்னர் கிரீனுக்கு போன் செய்தார். அது தான் ஸிம்ஸனுக்கு தருணம் கிடைத்தது. போனில் பேசுவதற்காக எங்களை சிறிது நேரம் வெளியே போகுமாறு கிரீன் சொன்னர். நான் முதலில் அறையை விட்டு போனேன். நான் போக திரும்பியதும் ஸிம்ஸன் தன் கையில் தயாராக வைத்திருந்த கத்தியால் நெஞ்சில் குத்தவே, சப்தமிடாமல் இறந்தார் கிரீன். உடனே கையில் அணிந் திருந்த கையுறையை அங்கேயே போட்டு விட்டு, உயிருடனிருக்கும் கிரீனுடன் பேசுவது போல் பேசிக்கொண்டே, என் பின்னல் வந்து கதவை மூடினன். ஸிம்ஸன் முதலில் அந்த அறைக்கு என்னுடன் வரும் போதுதனது கையை ஓவர் கோட் ஜேபியினுள் வைத்தவாறே யிருந்தார். அந்த கையில் உறை அணிந்திருக்கக் கூடும். அந்த கையிலேயே கத்தியையும் வைத்திருக்கக கூடும்."

"கைக்கு உறைபோட வேண்டிய அவசியம் என்ன?" என்று பிரதமர் கேட்டார்.

"குத்தினதும் கையில் இரத்தம் சிறிது பட்டால் தெரிந்து விடுமல்லவா? மறு விநாடியில் என்னுடனிருப்பதால் நான் பார்க்கக் கூடும். இவ்வாறு கொலை செய்ததை உடனே நான் யூகித்தேன். ஆனல் அதை உங்கள் முன் அப்பொழுதே சமர்ப்பிக்க, போதிய அத்தாட்க்ஷி கிடையாது. அதுவுமல்லாமல் எனது மகளை அதே போலுள்ள ஒரு கத்தியுடனும் இந்த கையுரையின் ஜோடியைச் சேர்ந்த மற்றொரு கையுரையுடனும் அந்த வீட்டின் கீழே இருக்கு மாறு ஏற்பாடு செய்திருந்தான். அந்த வீட்டின் பின் பக்கம் வரை வந்த எனது மகள், யோசனை செய்து, வீட்டினுள் நுழைவது சரியல்ல வென்று திரும்பி விட்டாள்."

"பெர்ரிக்கு மிரட்டல் கடிதம் கிடைத்ததும், அவரைக் காப் பாற்றும் பொறுப்பு எங்களுக்கிருந்தது. அவர் அநேக நிலங்களை வாங்கி விற்கும் பழக்கமுடையவராதலால் அவருக்கு அநேக வித மான ஆட்கள் சிநேகம். அன்று ஹட்டன் வந்து சந்திக்கும் தினம் பெர்ரி அதற்கு முன் ஹட்டனைப் பார்த்ததில்லை. ஹட்டன் வரப் போகும் விஷயத்தை அவரது மகன் டாமுக்கு தெரிவித்திருந்தார். ஆனல் ஸிம்ஸனுக்கு தெரியப்படுத்த வில்லை. ஹட்டன் பெர்ரியைப்

பார்க்க வந்ததும் எதிர்பாராத விதமாய், தன்னுடன் பிரான்சில் ஊழல்களில் சேர்ந்துழைத்து, பின் ஜெயிலுக்கு அனுப்பப்பட்ட ட்ரம்மண்டை பார்த்ததும் அவரை யறியாமல் பயம் ஏற்பட்டது.”

“ஸிம்ஸன் ஹட்டன் வரும் சமயம் தூரத்தில் நிழலில் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தான். அதை ஹட்டன் பார்க்கவே, பயந்து திரும்பி விட்டார். எப்படியும் ட்ரம்மண்ட் தன்னைக் கொன்று விடுவா னென்ற பயமே ஹட்டனுக்கிருந்தது. ஹட்டனோ தைரிய சாலியல்ல. இருந்தாலும் ஒரு கடிதம் எழுதி, ஸிம்ஸனிருக்கும் அறையின் ஜன்னல் வழியாக போட்டார். அதை ஸின்ஸன் பார்த்து படித்தபின் நெருப்பில் போட்டுவிட்டான். அந்த காகிதத்தில் எறியாமலிருந்த ஒரு பாகத்தை நான் பார்த்தேன். அதில் “நீ தனியே......நான் தனியே...... 2-வது கட்டு” என்பவையே தெரிந்தது. அதில் 2-வது கட்டு என்று ஸிம்ஸன் ஜெயிலில் 2-வது கட்டில் இருந்ததையே குறித்தது. நீ தனியே என்னை கவனியாமல் உனது வேலைகளை செய்து கொண்டிருந்தால் நான் தனியே உன்னை கவனியாதவாறு எனது வேலையைக் கவனிக்கக் கூடும்” இதைப்போல் அக்கடிதம் எழுதி யிருக்கக் கூடும்.”

“அன்றிலிருந்து ஹட்டன், தனக்கு என்றைக்கு முடிவு வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதுவுமல்லாமல் அவர், மாரீஸின் சில இரகசியங்களை யறிந்திருந்ததால் அதைக் கொண்டு மாரீஸிடம் மிரட்டி பணம் பிடுங்கிக் கொண்டிருந்தார். மாரீஸோ இரத்தச் சின்ன சங்கத்தின் அங்கத்தினர். அதனால் ஹட்டன் எப்பொழுதும் அபாயகரமான மனிதன் என்று மாரீஸ் இரத்தச் சின்ன சங்கத்துக்குத் தெரிவித்தார். ஸிம்ஸன் துப்பறியும் தோரணையில் பேக்கர் தெருவு பிரவ்னிடம் போய், விசாரணை செய்வது போல் அந்த அட்ரஸுக்கு வந்த இரத்த சின்ன சங்கத்தின் கடிதங்களை உடைத்து உள் விஷயங்களை படித்து வந்தான். ஹட்டன் இறந்ததும், மாரீஸ் தனக்கு கிடைத்த பணத்துடன் ஓடிவிட தயாரானார். அந்த யோசனையுடனேயே ஹட்டனின் கணக்கை முடித்து அந்தபணத்தை தான் எடுத்து வைத்திருந்தார். ஹட்டன் இறந்ததும், மாரீஸின் பேரில் சந்தேக மேற்பட்டது. இரத்தச் சின்ன சங்கத்தினிட மிருந்து மாரீஸுக்கு அபாயம் நெருங்கிவிட்டதென்று செய்தி வரவே, ஆற்றோரமுள்ள வீட்டிற்கு ஓடி விட்டார். அந்த வீட்டை நாங்கள் சோதித்தோம்”

“நாங்கள் சோதித்தோமென்றால், ஸிம்ஸன் சோதித்தான். அதாவது மெத்தையில் எந்த அறையில் மாரீஸ் இருந்தாரோ அந்த அறைக்கு ஸிம்ஸன் போய் பார்த்து திரும்பி வந்து மெத்தையில் யாருமில்லை என்று சொன்னான்.”

"இன்னொரு விஷயம் உங்களுக்கு விளக்கப் பிரியப்படுகிறேன். ஸிம்ஸனுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டு கட்டப்பட்ட விஷயம்; அது மிக யோசனையுடன் செய்த காரியம். அப்பொழுது நானே பிரம்மித்து விட்டேன். ஸிம்ஸன் பணத்தை ஒரு கவரினுள் போட்டு, தனது பெயர் போட்டு தனது பிரத்யேக இடத்தின் விலாசத்தை எழுதி, போஸ்டுக்கு போடவேண்டிய கடிதங்களுடன் பெட்டியில் போட்டான். மெத்தையில் போட்டால் அது கீழேயுள்ள போஸ்ட் பெட்டியில் வந்து விழ வசதி ஏற்படுத்தி யிருந்தான். இவ்வாறு பணத்தைக் கடத்திய பின், தானே தனது கைக்கு விலங்கிட்டு, தன்னைக் கட்டி, தனக்கு மயக்க மருந்தை கொடுத்தான். இதைப் போல் நடந்த மறு நிமிடம் அந்த வீட்டை விட்டு போஸ்ட்காரன் கடிதங்களுடன் வெளியே போனது உங்களுக்கு ஞாபக மிருக்கலாம். ஆனால் ஸிம்ஸனுக்கு துர்அதிர்ஷ்ட வசமாக, அந்த அறையிலிருந்த ஒரு பீரோவினுள் குலோரியாவை முன்பே, ஸிம்ஸனுக்குத் தெரியாமல், இருக்குமாறு ஏற்பாடு செய்திருந்தேன். குலோரியா அங்கிருந்து சாவி துவார வழியாக ஸிம்ஸன் செய்தவை முழுவதையும் கவனித்திருந்தாள். அவன் மேஜையின் அறையினுள் வைத்த மயக்க மருந்தையும் பின் எடுத்துக் கொண்டாள்"

"கடைசியாக குத்துப்பட்ட பிராங்கோ, தனது மூடத்தனத்தாலேயே குத்துப்பட்டார். அவர் எனது மகளிடம் கெட்டெண்ணத்துடன் நெருங்கினர். அவர் பிடியினின்றும் இவள் விலக எத்தனித்துக் கொண்டிருக்கும் போது, பிராங்கோவின் பின்னால் திரையிலிருந்து ஒரு கத்தியைப் பிடித்த கை வெளி வருவதைப் பார்த்தாள். அந்த கத்தி பிராங்கோவின் வீட்டில் காணமற்போன கத்தி; அன்றே ஸிம்ஸனும் துப்பறியும் ஹோதாவில் பிராங்கோவின் வீட்டிற்கு போயிருக்கும் போது திருடியது. கத்தி பிராங்கோ இருதயத்தில் பாய வரும் சமயம், குலோரியா தனது பலத்தால் பிராங்கோவை ஒரு பக்கம் தள்ளியும் கத்தி குத்தப்பட்டது. ஆனால் இருதயத்தில் பாயாமல் தோளில் குத்தப்பட்டது. பிராங்கோ இறக்காதது ஸிம்ஸனுக்கு மிக கவலையைக் கொடுத்தது. அதுவுமல்லாமல் அதற்கு காரணம் குலோரியாவே என்பதையும் அறிந்தான்."

"அவனுடைய யோசனையைக் கவனியுங்கள். துப்பறிவதில் நிபுணன் என்னும் பெயர் பெற்று, போலீஸினுள் எனது வேண்டுகோளின்படி நுழைந்தான். அதினல் போலீஸ் இரத்த சின்ன சங்கம் விஷயமாக என்னென்ன செய்யப் போகிறார்களென்ற இரகசியத்தை அறிந்து வந்தான். அவன் எனது கடிதங்களையும் இரகசியமாக பார்த்து வந்ததால், அதில் டாம் எனக்கு அனுப்பிய ட்ரம்மண்டின் கொலை போட்டோவையும் எடுத்துக் கொண்டான். அந்த போட்டோ கவரின் ஸீல் ஒழுங்காக அவனுக்கு கிடைக்கவே,

தன்னைப் பற்றி டாம் அறிந்திருக்க முடியா தென்று எண்ண வேண்டியதாயிற்று. அதனாலேயே அவன் டாமை கொலை செய்ய யோசிக்க வில்லை.''

''பெரியோர்களே! இன்னும் இந்த கேஸில் ஏதும் சந்தேகம் இருந்தால், கேட்டால், என்னால் கூடுமான வரை விளக்குகிறேன். இன்னொன்று நான் தெரிவிக்க மறந்து விட்டேன். இரண்டு நாட்களுக்கு முன், நான் ஸிம்ஸனிடம், பெரிய கொலையாளிகளெல்லாம் தாங்கள் செய்யும் ஒரு சிறிய தப்பினால் மாட்டிக்கொள்கிறார்கள், என்று தெரிவித்தேன். ஏனெனில் ஸிம்ஸன் என்னிடம், தான் அன்று பிராங்கோ வீட்டிற்குப் போனதாகவும், அங்கு பிராங்கோவும் குலோரியாவு மில்லாததால், கிராம வீட்டிற்கு போயிருக்கக் கூடு மென்று நினைத்து, பின் கிராம வீட்டிற்குப் போனதாகவும் தெரிவித்தான். ஆனால் அன்று காலையிலிருந்து ஸிம்ஸன், பிராங்கோ வீட்டினருகே கூட போகவில்லை. கிராம வீட்டிற்கு வேலைக்காரர்கள் போவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே இவன் போய் காத்துக் கொண்டிருந்திருக்கிறான்.'' என்றார் இன்ஸ்பெக்டர் பென்டன்.

அதற்கு பிரதமர், ''எனக்கு இன்னும் ஒரு கேள்விக்குப் பதில் தெரியாமல் அவஸ்தைப் படுகிறேன். அதாவது உமது மகளுக்கு என்ன வெகுமானம் அளிக்கலாம்? உங்களுக்கோ வேலை உயர்வு கொடுப்பது மிக சுலபம். தற்போது காலியாயிருக்கும் அஸிஸ்டென்ட் கமிஷ்னர் வேலையை உங்களுக்கு கொடுக்கலாம். ஆனால் உமது மகளுக்கு?'' என்று கேட்டார்.

அச்சமயம் இன்னொரு சப்தம் கேட்டது ''குலோரியாவைப் பற்றி கவலைபட வேண்டியதில்லை. ஏனென்றால் எங்களது கலியாணம் சீக்கிரம் முடியும்'' என்று டாம் சொன்னான்.

உடனே எல்லோரும் டாமின் பக்கம் திரும்பி சந்தோஷ வாழ்த்து கொடுத்தனர். அச்சமயம் இன்ஸ்பெக்டர் தனது மகளினருகே போய் ''அம்மா! என்னிடம் சொல்ல வில்லையே'' என்று கேட்டார்.

'' நான் அவரிடமே சொல்லவில்லையே'' என்று ஆச்சரியத்துடன் சொல்லி, டாமைப் பார்த்தாள்.

'' என்ன ? உன்னிடம் கலியாணத்தைப்பற்றி டாம் கேட்கவேயில்லையா ?''

அவள் தலையை யசைத்து, ''இல்லை. நான் கலியாணம் செய்ய தயாரென்றும் சொல்லவில்லை. ஆனால் இதைபோல் ஏதாவது ஏற்படுமென்று மனதில் நினைத்திருந்தேன்'' என்றாள்.

ட்ரம்மண்ட் என்னும் ஸிம்ஸனை தூக்கிலிட ஜெயிலிலிருந்து அழைத்துச் செல்லும்போது, சிகரேட் பிடிக்க வேண்டுமென்றான். அதற்கு ஜெயில் அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. "ஆ! பிரான்ஸில் கொலை யுண்ணப்படுகிறவன் என்ன கேட்டாலும் அனுமதிப்பார்கள். ஆனல் இங்கே......" என்றான். "அது பிரான்ஸில் நடைபெறலாம்" என்ற பதில் கொடுக்கப்பட்டது.

அவனுடனிருந்த பாதிரியிடம் "நானும் எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனல் குலோரியா ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவள். அவள் டாமை கலியாணம் செய்து கொள்வாளென்று நினைக்கிறேன். அப்படியாயின் அவன் பெரிய அதிர்ஷ்ட சாலி. எனக்கு சாதாரணமாக பெண்களென்றாலே பிடிக்காது. நான் இதுவரை வெற்றியுடன் எனது காரியத்தை நடத்தியதற்கும் இதே காரணம்; இருந்தாலும் எனக்கு கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன்றினல் எனக்கு தகுந்த துணைவி குலோரியாவேயாவாள். அல்லது அவளைப் போலொருவளைத் தேடிச் செல்வேன்" என்றான்.

அவனை தூக்கிலிடப் போகிறவன் அவனருகே வந்ததும் அவனை உற்று நோக்கி "நீ ஷிவாலியரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா? உனது தொழிலை சேர்ந்தவன்" என்று கேட்டான். வந்தவன் அதற்கு பதில் சொல்லவில்லை. "ஷிவாலியரைப்பற்றி விசாரி. அவனுடைய விஷயம் தெரிந்தால் அதிலிருந்து நீ பாடம் கற்றுக்கொள்வாய். எப்பொழுதும் குடிக்காதே. குடித்தலே உன்னை பாழாக்கும். அந்த குடித்தலில்லாவிடில், நான் இங்கிருந்திருக்க மாட்டேன்" என்றான்.

கடைசியில் அவன் முகத்தில் ஒரு வெள்ளை துணியைப் போட்டு மூடி கழுத்தில் கயிறை சுருக்கிட்டனர்.

"இந்த கயிறு அறுந்து விடாதென்று நினைக்கிறேன்" என்றான். அது தான் இரத்தச் சின்ன சங்கத் தலைவனின் கடைசி வார்த்தைகள்.

முற்றிற்று.




# 'டெலிவிஷன்' என்னும் நவீன 'மாய தர்சினி'

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

பிள்ளைகளே! நீங்கள் நவீன நாகரிக சாதனங்கள் மிகுந்த காலத்தில் பிறந்திருக்கிறீர்கள் என்பதற்காக, நீங்கள் பாக்கியசாலிகள் தான். இப்போது நீங்கள் என்னென்ன அற்புதங்களைக் காணுகிறீர்கள், என்னென்ன சௌகரியங்களை அனுபவிக்கிறீர்கள் என்பதை சற்று சிந்தித்துப்பார்த்தால், நீங்களே சந்தோஷப்பட்டு பூரிப்படைவீர்கள்.

அல்லாஹு தஆலாவுடைய நிஃமத்து என்னும் அருட்பாக்கியங்கள் அனந்த மனந்தமாகும். வானத்திலிருந்து மழைபெய்வதும், தென்திசையிலிருந்து நல்ல காற்றாகிய தென்றல் வீசுவதும், டிசம்பர், ஜனவரி மாதங்களில் ஜில் என்ற பனிக் குளிர் காற்று வீசுவதும், மே-ஜூனில் வெய்யில் காய்வதும்—மற்றும் எல்லாம் அல்லாஹ்வுடைய நிஃமத்துகள் தான். இவை இயற்கையினால் உண்டாகும் நிஃமத்துகள்.

செயற்கை முறையிலும் அல்லாஹு தஆலா நமக்கு அநேக நிஃமத்துகளை இவ்வுலகில் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறான். அவைகளில் ரயில்வண்டி, மோட்டார், ஆகாயவிமானம், கப்பல், தந்தி, கம்பியில்லாத் தந்தி முதலியன வெல்லாமும் அடங்கும். இவைகளெல்லாம் 'ஸைன்ஸ்' என்னும் விஞ்ஞான உதவி கொண்டு மாந்தன் கண்டு பிடித்த செயற்கை அற்புதங்கள் என்னும் நிஃமத்துகளேயாகும்.

## கிராம்போனும் ரேடியோவும்.

லண்டனில் சர்ச்சில் துரை ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்வதை நாம் சென்னையில் வீட்டிலிருந்து கொண்டே கேட்கலாம்; டில்லியில் நமது பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு பிரசங்கம் செய்வதையும் இங்கிருந்தே காதாரக் கேட்டு இன்புறலாம். இங்ஙனம் தூரதூர தேசத்தில் பிரசங்கம் புரியும் பெரியோர்களின் சொற்

பொழிவுகளை நம் காதுக்கு எட்டும்படிச் செய்யும் நவீன அற்புதக் கருவி அல்லது அதிசயப் பெட்டியின் பெயர் 'ரேடியோ' என்பதாகும்.

பிள்ளைகளே! ரேடியோ பெட்டியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதிலிருந்து பேச்சு, பாட்டு முதலிய சப்தங்கள் வெளிவருவதையும் நீங்கள் கேட்டு இன்பம் அடைந்திருப்பீர்கள். முன் காலத்தில் இப்படிப்பட்ட பெட்டியிலிருந்து சப்தம் வந்தால், உள்ளே யாரோ மனிதன் புகுந்து இருந்துகொண்டு கத்துகிறான், பேசுகிறான் என்று சொல்லி யிருப்பீர்கள். ஆனால் இப்போது, எதுவும் சாத்தியம் என்பது மேனாட்டு ஸைன்ஸ் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது.

முன்னெல்லாம் கிராம்போன் பெட்டியில் ரிக்கார்டு வைத்து சப்தம் வருவதை கேட்டு நம் தகப்பனார், பாட்டனார்கள் ஆச்சரியப் பட்டார்கள். ஆனால் இப்போது எத்தகைய ரிக்கார்டு தட்டும் சாவியும் ஊசியும் இல்லாமலேயே, ஒரு மறையை முடுக்கியதும் பாட்டோ, பிரசங்கமோ கணீரென்று ரேடியோவில் ஒலிக்க ஆரம்பித்து விடுகிறதே இது ஆச்சரியமல்லவா?

## 'டெலிவிஷன்' அற்புதம் காணலாம்.

இப்போது 'டெலிவிஷன்' என்ற பெயரால் அற்புதமான ஒரு கருவியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் அயல் நாட்டு அறிஞர்கள். அதன் முன் நம் கிராம்போனும் ரேடியோவும் சாதாரண வெறும் பெட்டிகளாகிப் போய் விடுகின்றன.

கிராம்போனில் சாவி கொடுத்து, தட்டும் ஊசியும் பொருத்தினால்தான் பேச்சு பாட்டு சப்தம் வரும்; ரேடியோ பெட்டியில் அந்த சிரமம் இல்லாவிடினும் வெறும் சப்தத்தை மட்டும் தான் காதால் கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆம், ரேடியோவை கண்ணில்லாத குருடன் கூட கேட்டு இன்பம் அடையலாம்.

ஆனால், டெலிவிஷன் என்னும் புது நூதன அற்புதக் கருவியின் மூலம், கண்ணில்லாத குருடன் பாதி இன்பம் தான் அடைய முடியும். அதாவது சப்தத்தை மட்டும் தான் கேட்பான். ஆனால் அதன் பளிங்குத் திரையில் காணப்படும் பிரத்தியக்ஷமான தூரத்து அதி அற்புதக் காட்சிகளை அவன் காண முடியாது. ரேடியோவை அனுபவிக்க காது வேண்டும். டெலிவிஷனை அனுபவிக்க காதும் கண்ணும் இரண்டும் வேண்டும்.

## டெலிவிஷன் என்றால் என்ன?

டெலிவிஷன் என்றால் இன்னதென்று இத்தப் பத்திரிகையில் எழுதிக்காட்டி விளங்க வைப்பது முடியாது. அதை நேரில் பார்த்

துக் கேட்டால் தான் அதன் அருமை பெருமை தெரியும். ஆயினும் உங்களுக்குப் புரியுமாறு சொல்ல முயற்சிக்கிறேன்:

நீங்கள் திரைப்படம் என்னும் சினிமாவைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அதாவது பெரிய வெள்ளைத் திரையில் அலிபாபா, அல்லது அலாவுத்தின் கதை பிரதர்ஸனமாக காட்டப்படுகிறதே. அது இருட்டு சமாசாரம். வெளிச்சத்தில் சினிமா காட்ட முடியாது. ஏனெனின் அது வெறும் ஒளி என்னும் பிரகாசமும் ஒலி என்னும் சப்தமும் தான்.

வெள்ளைப் பர்த்தாவின் மீது, நம்முடைய முதுகுகளுக்குப் பின்னுலிருந்து காட்டப்படும் ஒளி—பிரகாசம்—ஜோதி—சுடர் அந்த வெண்திரை மீது விழுகிறது. அதில் காட்சிகளும் உருவங்களும், அசைவதும் நகர்வது காணப்படுகின்றன. அத்துடனே, இப்போது பேசும் படங்களே இருப்பதால், அந்தத் திரைக்குப் பின்னுலிருந்து ஒலி பெருக்கிக் கருவியிலிருந்து பேச்சும், பாட்டும், சப்தங்களும் பெரும் அளவில் வெளிவருகின்றன.

இத்தகைய சினிமாவுக்கு, சுருள்படம் என்னும் பிலிம் வேண்டும்; மின்சார ஒளி ஏராளமாக வேண்டும்; இதைப்போட்டு காட்ட பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தியேட்டர் என்னும் காட்சிக்கூடமும், 'புரஜக்டர்' என்ற மெஷீனும் வேண்டும். அத்துடன் ஒலிபெருக்கிக் கருவியும் வேண்டும். இதெல்லாம் ஒருங்கே அமைந்திருந்தால்தான் சினிமாகாட்சி நடைபெறமுடியும்

டெலிவிஷன் என்ற கருவிப்பெட்டியின் மூலம், நாம் சினிமாவில் வெண்திரையில் பெரிய அளவில் காணுவதுபோன்ற காட்சியை, சிறிய அளவில் வீட்டுக்குள்ளேயே இருந்து, யாதொரு பர்தா திரையுமில்லாமல், ஒலிபெருக்கி (லவுட்ஸ்பீக்கர்) இல்லாமல் காணவும் கேட்கவும் முடியும்.

இப்போது சாதாரணமாக உள்ள ரேடியோ பெட்டி உள்ள அளவுக்கே டெலிவிஸன் பெட்டியும் இருக்கும். ஆனல் அதில் ஒரு சதுரஅடி அளவுக்கு வெள்ளைப் பளிங்கு கண்ணாடியும் பொருத்தப்பட்டிருக்கும். வழக்கம்போல், தலைவர்களின் பிரசங்கத்தையும் நடிகை காட்டியக்காரியின் பாட்டையும் கேட்டுக் கொண்டு, அத்தலைவர்களின் கம்பீரமான முகத்தோற்றத்தையும் காட்டியக்கார நடி

கையின் ஆடல் அசைவையும் காணலாம். அதாவது வீட்டுக்குள் இருந்துகொண்டே வெகுதூரத்தில் நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளை அப்போதுக்கப்போது உண்மையான பிரத்தியக்ஷக் காட்சியாய், அந்த டெலிவிஷன் பெட்டியின் பளிங்குக் கண்ணாடித்திரையில் கண்டு மகிழலாம்.

## டெலிவிஷன் எப்படி இயங்குகிறது?

இதை விளக்குவதற்கு எழுத்தும் வாசகமும் போதாது; நேரில் பார்த்து அனுபவிக்கும் காதும் கண்ணும் அறிவும்தான் வேண்டும். ஆயினும் உதாரணமாக சில விளக்கம் கூறலாம். அதாவது:—

நமது மாபெரும் தலைவர் ஜவஹர்லால் நெஹ்ரு அவர்கள், டெல்லியில் செங்கோட்டையில், பார்லிமெண்டில் பிரசங்கம் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அங்கு டெலிவிஷன் கேம்ரா ஏற்பாடுகளை ஏற்கெனவே செய்திருப்பார்கள். அதாவது சினிமாப் படம் எடுப்பதற்கு உபயோகிக்கப்படும் கேம்ரா மாதிரி, பெரிய அளவில் விசேஷக் கருவியும் மின்சார கம்பிகளும் நிறைந்த டெலிவிஷன் கேம்ராமூலம் ஜவாஹர்லால் உருவத்தை போட்டோ எடுத்துக் கொண்டும் பிரசங்க சப்தத்தை மின்சாரக் கம்பியின் மூலம் ஒலி அலைகளாக மாற்றிக்கொண்டும் இருப்பார்கள்.

பிரசங்கமாகிறது சப்த அலைகளாகவும், உருவத்தோற்றமானது பிரகாச அலைகளாகவும் ஆகாயத்திலே மிதக்க விடப்படுமாம். அந்த ஒலியும் ஒளியும் எங்கணும் பரவி, எங்கெங்கு டெலிவிஷன் பெட்டி வைத்து விசையைத் திருப்பிக் குறிப்பிட்ட காட்சியைக் காண விரும்புகிறார்களோ அங்கு அவரவர் வீட்டு டெலிவிஷன் பெட்டியில் காட்சி தெளிவாகத் தெரிவதோடு, பிரசங்கமும் ஒலி பெருக்கியினால் நன்றாய் கேட்குமாம்.

டெலிவிஷன் எப்படி இயங்குகிறது என்று எழுத்து மூலம் இவ்வளவுதான் உங்களுக்குச் சொல்லமுடியும். ரேடியோ அமைப்பு பற்றி, ஸைன்ஸ் ஆராய்ச்சி மூலம், நீங்கள் பெரியவர்களாகி படித்துப் பார்த்து அறிந்துகொள்வீர்களே, அப்போதுதான், உங்களுக்கு விஷயம் புரியும்.

## ஆண்டவனுக்கு நன்றி

நம் காலத்தில் ஆண்டவன் இந்த அற்புத டெலிவிஷன் கருவியை காட்டித் தந்ததற்காக நாம் ஷுக்ரு என்னும் நன்றி செலுத்து

வோம். ஆம், செலுத்தியேயாக வேண்டும். ஏனெனின் டெலிவிஷன் நம் நாட்டிலும் பரவி நம் ஊர்களுக்கும் நம் வீடுகளுக்கும் வந்து விட்டால், நாம் என்னென்ன அற்புதக் காட்சிகளை யெல்லாம் கண்டு ஆனந்தம் அடையலாம் தெரியுமா!

ஸுப்ஹானல்லாஹ்! திருமக்காவில், அகில உலக முஸ்லிம்களெல்லாரும் துல்ஹஜ்ஜு மாதத்தில் கூடி ஹஜ்ஜு வணக்கம் புரிகிறார்களென்றால், அந்த அற்புதக் காட்சியை, நாம் டெலிவிஷன் மூலம் காணமுடியும். அங்கு ஈதுப்பெருநாளுக்காக ஓதப்படும் அரபு குத்பாவையும் கேட்க முடியும். ஆஹா! என்ன ஆச்சரியம்! எல்லாப் புகழும் சர்வ லோக ரக்ஷகனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும்.

வல்ஹம்து லில்லாஹ்!

---

# "கமால் கோரிக்கை"

(மேல்விஷாரம் 'அஞ்சுமனே அன்வாருல் இஸ்லாம்' ஆதரவில் 28-10-55 நடந்த "ஸீரத்துன நபி" பொதுக் கூட்டத்தில் பாடப் பட்டது. இயற்றியவர் ஷெ அஞ்சுமன் ஜனரல் செக்ரடரீ)

## "கவிஞர் மாஸ்டர் கமால் பாபு"

படம்-கணவனே கண்கண்ட தெய்வம் மெட்டு-உன்னை கண்தேடுதே.

நம்மை—நபீ பொருட்டாலே
நம்—பாவங்கள் யாவும் பொறுத்தருள்வாயே
நாயனே உன்னை கெஞ்சி கேட்கிறோம். (நம்மை)

உன்னை விட நம்மை ஆதரிப்பார் உண்டோ?
உள்ளம் பதர்வதை நீ உணராததோ
அடியாரை சோதிக்க—இனிமேலும் ஆசையோ. (நம்மை)

பாத்திமாவின் தோழி என்னும் பத்தினி
பெண்கள் எல்லாம் பறிக்கொடுத்து கற்பை
பரதவிப்பதேனோ

அழிவான பாதையில் இருப்பதை அறிந்தும்
அறியாத பாவனை அழகாகுமோ
கமால் கோரிக்கை—கட்டாயம் ஏற்பாயே. (நம்மை)

## லேலா மஜ்னூன்.

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனு கிய மஜ்னூனென்னும் வாலிபன், அழகில் சிறந்த லேலா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரை யொருவர் நேசித்து பல துன் பங்களுக்கு இலக்காகி, இறுதியில் சந்திக்கும் வரை நடந்துள்ள சரிதை இது. இது உர்தூ பாஷை யில் லேலீ மஜ்னூனென்னும் பெயர் பெற்ற காவிய மாக விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமையான நாவலைப்போல் வசன ரூபமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1–4–0

## வல்லப நாச்சியார்.

இது துப்பறியும் ஓர் இனிய நாவல். படிக் கப் படிக்க மிக ருசிகரத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக்கூடிய அழகிய கதை. விலை ரூ. 1–9–0

## ஔரங்கஸீப்.

இது டில்லி மன்னர் ஷாஜஹான் சக்ரவர்த் தியின் புத்திர சிகாமணியாகிய ஔரங்கஸீபின் சரித்திர வரலாறு. இவர் நமது இந்திய அரச ரானபடியால் இவருடைய சரிதையை ஒவ்வொரு வரும் படித்தறிய வேண்டியது அவசியம்.

விலை ரூ. 1–9–0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(16-வது பகுதி)

# திருக் குர்ஆன் சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## ஆத் கூட்டத்தார் மீது ஆண்டவன் கோபம்!

(இறைவனுகிய) யாம் ஆத் கூட்டத்தார் பால், (ஆதின்) சகோதரர் ஹூதை நபியாக ஆக்கி (சத்போதனைக்காக) அனுப்பி வைத்தோம். (ஹூத் நபியாகிய) அவர், ஜனங்களை அழைத்து "நீங்கள் எல்லோரும் (ஒரே) இறைவனையே வணங்குங்கள்; அவனைத் தவிர்த்து வேறு (எப்பொருளும்) எவரும், (மன்பதைகளின்) வணக்கத்துக்கு உரியவையல்லர்: (ஜனங்களே!) உங்களுக்கு ஆண்டவனைப் பற்றி பயம் இல்லையா? (நான் சொல்வதைக் கேளுங்கள்") என்று போதனை செய்தார். அதற்கு அந்த காபிர் கூட்டத்தினரில் கௌரவம் பெற்றவர்கள் (ஆக்ஷேபித்தும் எதிர்த்தும்) "எ ஹூதே! நீர் ஒரு முட்டாளா யிருக்கிறீர். மேலும் நீர் ஒரு பொய்யனுகவும் இருக்கிறீர் என்பதே எங்கள் அபிப்பிராயம்" என்று கூறினார்கள். அதற்கு ஹூத் (நபி) மேலும் அவர்களை(ப் பரிவுடன்) நோக்கி "நிச்சயமாக நான் முட்டாளாக இல்லை; உண்மையில் நான் (உங்கள் நன்மைக்காக) ஆண்டவனுல் அனுப்பப்பட்ட ஒரு தூதனுகவே இருக்கின்றேன். நான் எனது இரக்ஷகனிட மிருந்து உங்களுக்கு நற்போதனை கொண்டு வந்திருக்கிறேன். உண்மையில் நான் உங்கள் நன்மையை கோரும் தோழனுகவும் இருக்கின்றேன். (ஓஹோ!) உங்களிலேயே (பிறந்து வளர்ந்த நானுகிய) ஒருவன், உங்களுக்கு ரஸூலாக வந்தது ஆச்சரியமா யிருக்கிறதோ! ஆயினும் என் மூலமாக இறைவன் அனுப்பி வைத்த தூது மொழி உங்களுக்கு எட்டி விட்டது. நான் இறைவனுடைய (கோபத்தாலாகும்) வேதனையைக் கொண்டு உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன். அந்த(ப் பழைய கால) சம்பவத்தை நினைத்துப் பாருங்கள்; (அதாவது) நூஹு நபியுடைய கூட்டத்தார் (அதிக்கிரமத்தால்) அழிந்தொழிந்துப் போன பின், இறைவன் உங்களை அந்த ஸ்தானத்தில் ஆக்கி வைத்தான்; மேலும் அவன் தன்

அருளால், உங்களில் வம்ச விருத்தியை உண்டாக்கி, உங்கள் (ஜனத் தொகையால்) கூட்டத்தை பெருகச் செய்து வைத்தான். ஆகவே நீங்கள் இறைவனின் அருட் பாக்கியங்களை எண்ணிப் பார்த்து, பணியுங்கள்; இதனுல் உங்களுக்கு (இகபர) வெற்றி கிடைக்கும்'' என்று (நீதிகளை) எடுத்தோதினர். இதற்கு அக்கூட்டத்துத் தலைவர்கள் (ஆக்ஷேபித்து) "ஏ ஹூதே! எங்கள் பெரியோர்கள் வணங்கிக் கொண்டிருந்த (ஏராளமான) தெய்வச் சிலைகளை விட்டு உமது ஒரே ஒரு இறைவனை வணங்குமாறு எங்களை நிர்ப்பந்திப்ப தற்காகவா நீர் எங்களிடம் விஜயம் செய்தீர்! எங்கள் சுவாமிகளை நாங்கள் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டுமா? (முடியாது). நீர் போம்! (உம் பேச்சை நாங்கள் கேட்க மாட்டோம்.) அப்படி நீர் சத்திய மானவரா யிருந்தால், எங்கள் மீது வேதனை உண்டாகும் என்று எச்சரிக்கை செய்கிறீரே, அந்த (உமது இறைவனின்) தண்டனையை போய்க் கொண்டு வாரும், பார்க்கலாம்'' என்று அவர்கள் (அலக்ஷிய மாய்) கூறி விட்டார்கள். அதன் மேலும் ஹூத் (நபி) அவர்களை நோக்கி "ஆம்! நிச்சயமாகவே (ஏக தெய்வமான) அல்லாஹ்வின் தண்டனையும் (வேதனையும்), அவன் கோபாக்கினியும் உங்கள் மீது (கூடிய சீக்கிரம்) உண்டாகத் தான் போகிறது. என்ன, நீங்கள் (கேவலப் பொருளான) விக்கிரஹங்களின் பெயர்களைக் கூறியா (அல்லாஹ்வுக்கு எதிரிடையாய்) என்னேடு போராட்டம் செய்கிறீர்கள்? இவைகள், நீங்களும் உங்கள் (மூதாதைப்) பெரியோர்களும் சுயமே உற்பத்தி செய்து கொண்ட சிலைகள் தானே! 'இச்சிலைகளையே வணங்குங்கள்' என்று (எல்லாம் வல்ல) இறைவனிட மிருந்து உங்களுக்கு ஏதேனும் அத்தாட்சி வந்திருக்கிறதா? (காட்ட முடியுமா?) இல்லை! ஆகவே நீங்கள், (இறுதியாக) அவ்விறைவனுடைய தண்டனை (வேதனை) உண்டாவதை எதிர் நோக்கி காத்துக் கொண்டிருங்கள்; நானும் தான் அதை (உங்கள் மீது) எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று (இறுதி) எச்சரிக்கை செய்து விட்டார். அதன் பின் (இறைவனுகிய) யாம் எம்முடைய ரஹ்மத் (எனும் பேரருளைக்) கொண்டு, அந்த (போதகர்) ஹூதையும் அவருட னிருந்த (நல்லவர்களான) தோழர்களையும் மட்டும் (வேதனையை விட்டும்) காப்பாற்றிக் கொண்டோம்; எம்முடைய (ஏக தெய்வ) அத்தாக்ஷிகளை ஏற்காமல் (மறுத்துப்) பொய்ப் படுத்திக் கொண்டிருந்த அந்த (ஆது) கூட்ட ஜனங்க ளெல்லோரும் வேரோடு கெல்லி எறியப்பட்டு (அழிந்து) போனர்கள்.

(ஸூரா: அல் அஃராப்; ருகூ: 9)

## ஸாலிஹ் நபியை எதிர்த்த தமூது கூட்டத்தார் அழிவு.

(முற்காலத்து மனிதர்களாகிய) தமூது கூட்டத்தார் பால், (இறைவனுகிய) யாம், அவர்களுடைய சகோதரராகிய ஸாலிஹ் என்பவரை (நபியாக்கி) தூதராக (ஏக தெய்வ போதனை செய்ய) அனுப்பி வைத்தோம். அன்னவர், (தமூது கூட்டத்தாராகிய) அந்த ஜனங்களை நோக்கி "ஏ ஜனங்களே, அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள். அவனைத் தவிர்த்து, வணங்குவதற்குரிய 'மஃபூத்' (தெய்வம்) வேறு ஏதும் கிடையாது. உங்களுக்கு உங்களுடைய இரக்ஷகனிட மிருந்து பகிரங்கமான (போதனைகள்) அத்தாட்சிகள் (ஏற்கனவே) வந்திருக்கின்றன. இதோ, இந்த ஒட்டகக் குட்டி, அல்லாஹ்வின் (புறத்திலிருந்து உங்களிடம் அனுப்பப்பட்ட) ஓர் அத்தாட்சியும் அற்புதமும் ஆகும். ஆகவே இதை சுயேச்சையாக (மேய) விட்டு வையுங்கள்; இது ஆண்டவனுடைய (பரந்த) பூமியில் மேய்ந்து திரிந்து கொண்டிருக்கட்டும்; (இதனை இம்சிக்காதீர்கள்); தீய கருத்துடன் ஒருவரும் இதன் மீது கையையும் வைக்கக்கூடாது. இன்றேல், ஆண்டவனுடைய கோபத்தாலான தெய்வ தண்டனை உங்களெல்லோரையும் (நன்றாய்) பிடித்துக் கொண்டு விடும். இன்னம் அந்த பழங்காலச் சம்பவத்தையும் எண்ணிப் (பார்த்து) பயப்படுங்கள்; (அதாவது:) இறைவன் உங்களை, (அழிந்து போன) ஆது கூட்டத்தாருடைய ஸ்தானத்தில் (இப்போது) ஆளாக்கி வைத்திருக்கிறான்; மேலும் அவர்கள் வாழ்ந்த பூமியின் மீது உங்களை வாழ வைத்தான்; ஆண்டவனுடைய கிருபையினாலேயே நீங்கள், இப்பூமியில் மாளிகை நிர்மாணித்து (ஜாகை ஏற்படுத்திக்) கொண்டிருக்கிறீர்கள்; மலைகளில் கூட நீங்கள் (கல்லைக் குடைந்து) இல்லம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, அல்லாஹ்வுடைய இத்துணை அருட் பாக்கியங்களை நன்றாய் சிந்தித்துப் பாருங்கள். ஆதலின் அவனது பூமியிலே (அதிக்கிரமம்) சச்சரவு (முதலியன) செய்து திரியாதீர்கள்" என்று (ஸாலிஹ் நபி) உபதேசம் செய்தார். இதைக் கேட்ட, தமூது கூட்டத்தில் (செல்வாக்குள்ள) அகந்தைக்காரர்கள் சிலர் (எதிர்க்கலானார்கள்; எனவே,) விசுவாசங்கொண்டு (நபியைப்) பின் தொடர்ந்திருந்த ஏழை எளிய ஜனங்களைக் கூட்டி (வற்புறுத்தி அவர்களை நோக்கி) "ஏ ஜனங்களே! ஸாலிஹ் அல்லாஹ்வுடைய (சத்திய) திருத்தூதர்தான் என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமோ?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த (எளிய) ஜனங்கள், (அதிகாரிகளை நோக்கி) "ஆம்! அவர் அல்லாஹ்வின் புறத்திலிருந்து தெய்வக் கட்டளைகளை கொண்டு வந்திருப்பவரே; நாங்கள் அவரை 'சத்தியமானவர்' எனத் தெரிந்து கொண்டுள்ளோம்" என்று (பதில்) சொன்னார்கள். இதைக் கேட்டு அந்த

(அகந்தைக்கார) அதிகாரிகள், (எளியோரை நோக்கி) "ஓ நீங்கள் விசுவாசம் (ஈமான்) கொண்டு விட்டீர்கள்; நாங்களோ அவரை நிராகரித்துத் தள்ளியே தீருவோம்" என்று கூறிவிட்டனர். (சுருங்கக் கூறுமிடத்து) அவ்வதமர்கள், அக்கிரமமாக அந்த (தெய்வீக) ஒட்டகத்தைப் பிடித்து (அறுத்துக்) கொன்று போட்டார்கள்; இதனால் ஆண்டவனுடைய கட்டளையை முற்றும் மீறியவர்களானார்கள். (இத்துடன் இருக்க வில்லை;) அவர்கள் ஸாலிஹ் நபியை நோக்கி "ஏ, ஸாலிஹே! நீர் இறைவனுடைய திருத்தூதர் என்பது உண்மையாக இருந்தால், எங்கள் மீது (இறைவனிடமிருந்து) வேதனையை கொண்டுவாரும், பார்ப்போம்; அப்போதே உம்முடைய வாதம் வாஸ்தவமானதாகும்" என்று ஏளனம் பேசினார்கள். எனவே (அந்த க்ஷணமே) அப்போது (பயங்கரமான) பூமியதிர்ச்சி ஏற்பட்டு, அவர்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு விட்டது; எனவே அவர்கள் வீடு வாசல்களோடு தலைக் குப்புறக் கவிழ்ந்து அழிந்து (மண்ணோடு மண்ணாய்ப்) போனார்கள். அப்போது ஸாலிஹ் நபி, அவர்களை விட்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டு (அவர்களை நோக்கி) "ஏ, அதமக் கூட்டத்தாரே! நான் எனது இரக்ஷகனிடமிருந்து சத்திய தூது கொண்டு வந்து உங்களிடம் (கட்டளை) ஒப்படைத்தேன்; உங்களுக்கு (இதமான முறையில்) நல்லுபதேசமும் செய்தேன்; அதனால் உங்களுக்கு ஒரு நிவாரணமும் ஏற்பட வில்லை; நீங்கள், (எப்போதுமே) உபதேசம் செய்பவரை விசுவாசிப்பதில்லை யன்றோ" என்று கூறிவிட்டுப் போனார்கள்.

(ஸூரா: அல்அஃராப்; ருகூ: 10)

## லூத் நபியின் கூட்டத்தாரும் இங்ஙனமே அழிந்தனர்.

(இறைவனாகிய) நாம், லூத் என்பவரை, அவருடைய (காலத்துக்) கூட்டத்தாருக்கு நல்வழி காட்டுவதற்காக (நபியாக) அனுப்பி வைத்தோம். எனவே, லூத் (நபி) தன் கூட்டத்தாரை நோக்கி, "ஏ ஜனங்களே! நீங்கள், (ஆண்-ஆண் சேர்க்கையாகிய) மானக்கேடான காரியத்தை விட்டும் ஒதுங்கிக் கொள்ளுங்கள். இந்த மாதிரியான (இயற்கைக்கு மாறான) ஈனச் செயலை இதற்கு முன் எந்தக் கூட்டத்தாரும் செய்ததில்லை. நீங்கள், (இன ஒற்றுமையான) பெண்மணிகளை விட்டு, காம இச்சையை நிவர்த்தித்துக் கொள்ள ஆண்பிள்ளைகளை அணுகுகிறீர்களே! (அந்தோ) மன இச்சையை முன்னிட்டு, தர்ம வரம்பைக் கடந்து ஈனச் செயல் புரியும் கூட்டத்தில் (நீங்களே உலகில் முதலானவர்களாய்) காணப்படுகிறீர்கள்" என்று (கடிந்துரைத்து) உபதேசம் செய்தார். இதை கேட்டு அந்த (ஈனத்தனமுள்ள) ஜனங்கள், (போக்கிரிகளைத் தாண்டிவிட்டு) "தங்களை பரிசுத்தவான் என்று சொல்லிக்கொள்ளும்

(லூத் நபி முதலிய) இந்தப் பேர்வழிகளை, நமது ஊரை விட்டும் (நாட்டை விட்டும்) துரத்தி விடுங்கள்'' என்று சொல்லி விட்டனர். அப்போது இறைவனாகிய நாம், லூத்(நபி) அவர்களையும் அவர்களது (உத்தம) குடும்ப ஜனங்களையும் (அவமானத்திலிருந்து) காப்பாற்றிக் கொண்டோம்; ஆனால் அவருடைய (வழிகெட்ட) மனைவி மட்டும் வேதனைக்கு இலக்கான அந்தக் கூட்டத்தில் (சேர்ந்து) மிஞ்சியிருந்து விட்டாள். எனவே (இறைவனாகிய) யாம் (வானத்திலிருந்து) அவர்கள் மீது கல் மழையைப் பெய்யவைத்து (அவர்களை அடியோடு அழித்துப்) போட்டோம். ஆதலின் (முஸ்லிம்களே!) நன்றாய் யோசியுங்கள்; பாபிகளுடைய முடிவு (உலகில்) எங்ஙனம் அதோ கதியாகிற தென்பதை எண்ணிப் பாருங்கள்.

(ஸூரா: அல்அஃராப்; ருகூ: 10)


## தஸ்கிறதுல் அவுலியா

(இதில் பதினொரு நாதாக்களுடைய சரித்திரங்களடங்கி யிருக்கின்றன)

1-வது ஹஸரத் இமாம் ஜஃபறிஸ்ஸாதிக் றஹிமஹுல்லா, 2-வது ஹஸரத் உவைஸுல் கறனீ றஹிமஹுல்லா, 3-வது ஹஸரத் ஹஸன் பஸரி றஹிமஹுல்லா, 4-வது ஹஸரத் மாலிக்கிப்னு தீனார் றஹிமஹுல்லா, 5-வது ஹஸரத் முஹம்மது வாஸிஃ றஹிமஹுல்லா, 6-வது ஹஸரத் ஹபீபு அஜமி றஹிமஹுல்லா, 7-வது ஹஸரத் அபூ ஹாதிம் பகீர் றஹிமஹுல்லா, 8-வது ஹஸரத் அஹமதுப்னு குலாம் றஹிமஹுல்லா, 9-வது ஹஸரத் ரூபியதுல் அதவிய்யா றஹிமஹுல்லா, 10-வது ஹஸரத் புலைலுப்னு இயால் றஹிமஹுல்லா, 11-வது ஹஸரத் இபுராஹீமுப்னு அத்ஹம் றஹிமஹுல்லா ஆக இப்பதினொரு நாதாக்களுடைய சரித்திரங்கள் அடங்கிய நூல்.

கலிகோ பைண்டு விலை ரூ. 2--2—0

ஷை அறபுத் தமிழ் 1, 2, 3-பாகங்கள்: ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 2—2—0

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# முனாஜாத்து மாலிகை

## பன்னிரண்டு முனாஜாத்துகள் சேர்ந்திருக்கின்றன.

1-வது அல்லாஹுதஆலாவுடைய அஸ்மாவுல் ஹுஸ்னு வென்னும் தொண்ணூற்றொன்பது திருநாமங்களைக் கொண்டு கேட்கப்படும் முனாஜாத்தும், 2-வது ஹக்கதஆலாவின் பேரில் அலிபுபே இருபத்தொன்பது ஹர்புகளை ஆரம்பமாக வைத்துப் பாடப்பட்ட முனாஜாத்தும், 3-வது றஸூலுல்லா பேரில் முனாஜாத்தும், 4-வது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பேரில் முனாஜாத்தும், 5-வது பாத்திமா நாயகி அவர்களின் பேரில் முனாஜாத்தும், 6-வது இமாம் ஹஸன் ஹுஸைன் (றலி) அவர்களின் பேரில் முனாஜாத்தும், 7, 8-வது முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்தும், 9, 10-வது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பேரில் முனாஜாத்தும், 11-வது கல்வத்து நாயகம் ஒலியுல்லா அவர்கள் பேரில் முனாஜாத்தும், 12-வது கிழக்கரை ஷெய்கு ஷாஹுல் ஹமீது ஆலிம் அவர்கள் பேரில் முனாஜாத்தும் ஆக பன்னிரண்டு முனாஜாத்துகள் அடங்கிய அரிய நூல். இதன் விலை அணா. 5

அறபுத் தமிழ் விலை அணா. 12

# மஜ்மூஅ முனாஜாத்து

சுத்தத் தமிழ்

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸைய்யிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத்து, காஜாபந்தே நவாஸ் முனாஜாத், ஸரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மூளை பலத்தால் முன்னேறியவர்

## 'ஹென்ரி போர்டின்' வரலாறு

(முஹம்மது தாவூது)

## (3—வது பகுதி)

இம்மாதிரியாக வேலை துரிதப்பட்டதன் முதல் விளைவு குழப்பம் ஏற்பட்டதாகும். ஒவ்வொரு உபநிலைய மார்க்கமும் உயரே எழும்பும் நீரோடை போன்று இருந்தது. வெள்ளத்தைக் கொண்டு செல்ல நதி எதுவும் இல்லாமற் போயிற்று. தரையின் மத்தியில் மோட்டார் பிரேம் அசையாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தது. எஞ்சின், எஞ்சினில் தீப்பொறி உண்டாக்கும் காந்தக் கருவி (Magneto) முதலியவற்றை ஆட்கள் அங்கு கொண்டு வந்து சேர்த்த வண்ண மிருந்தனர். இதனால் இடையில்ஸ்தம்பித நிலை ஏற்பட்டது. எனவே, மோட்டார் பிரேம் (Chassis) நகர்ந்து செல்வதற்கான உபாயம் கண்டு பிடிப்பது அவசியமாயிற்று. அந்த தருணத்தில், பெரும் அளவில் உற்பத்திக்கான கடைசி இரகசியம் கண்டு பிடிக்கப்பட்டது.

ஒரு பாரமெழுப்பி, 250 அடி நீள தாம்புக் கயிறு ஆகிய வற்றைக் கொண்டு மோட்டார் பிரேமை மெதுவாக இழுத்துச் செல்ல போர்டு வழி செய்தார். ஒவ்வொரு வேலைக்கும் காலம் நிர்ணயிக்கப்பட்டு அதற்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டன. மோட்டார் பிரேம் வந்து சேர்ந்ததும் தேவையான மற்ற தளவாடங்களும் கருவிகளும் அருகில் இருக்குமாறு எல்லாம் வழியில் ஒரு இடத்தில் குவித்து வைக்கப்பட்டன. பிரேமுடன் நடந்து அல்லது அதனை ஓட்டிக் கொண்டு தொழிலாளர் சென்றனர். அது நகர்ந்து செல்லும் போது ஒவ்வொருவரும் அவரவருக்கு இடப்பட்ட வேலையை தத்தம் கரங்களிலிருந்த கருவிகளைக் கொண்டு செய்து முடித்தனர். அதற்கு முன் 12 மணி 28 நிமிட நேரத்தில் ஒரு கார் பூர்த்தி செய்யப்பட்டது கிடையாது. தாம்புக் கயிற்றால் இழுத்துச் செல்லப்பட்ட முதல் கார் ஐந்து மணி 50 நிமிட நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டது என்பதுஇங்கு கவனிக்கத் தக்கது.

பின்னர், பாரமெழுப்பியும் தாம்புக் கயிறும் உபயோகிப்பது கைவிடப்பட்டது. விசையால் இயங்கும் வாகன அரைக்கச்சுப் (Conveyor belt) பொருத்தப்பட்டது. தரை மட்டமான ரங்கு

ராட்டினம் (Flat escalator) போன்று அமைந்திருந்தது. மோட்டார் பிரேமையும் இரு புறங்களிலும் தொழிலாளர்களையும் தாங்கிக்கொள்ளு மளவுக்கு அது விசாலமானதாக யிருந்தது. தொழிலாளர்களும் காரும் ஒன்ருகவே செல்வதற்கு இதனல் வசதிப் பட்டது. அவரவரும் தத்தமக்கிடப்பட்ட வேலையைச் செய்து முடித்து, பின்னர் சில அடிகள் பின்னடைந்து அடுத்த காரிலும் தமது வேலையைச் செய்ய வசதியாக யிருந்தது.

நிமிஷத்துக்கு ஆறுஅடி வேகத்தில் நகர்ந்து சென்ற வாகன அரைக் கச்சு நாற்பத்தைந்து நிலையங்களைக் கடந்து சென்றது. ஒவ்வொரு நிலையத்திலும் காரில் ஏதாவதொரு சாமான் பொருத்தப் பட்டது. நாற்பத்தைந்தாவது நிலையத்தில் எஞ்சின் ஓட்டி விடப் பட்டு கார் தானகவே நகர்ந்து சென்றது. அந்த முதல் வாகன அரைக் கச்சில் ஒரு காரை பூர்த்தி செய்து அதனை ஓடும் நிலைக்குக்கொண்டு வருவதற்கான காலம் சுமார் ஆறுமணி நேரத்திலிருந்து தொண் ணூற்று மூன்று நிமிட நேரமாகக் குறைக்கப்பட்டது.

அதிர்ஷ்ட வசமாக எவ்வித சம்பிரதாயத்தையும் நாங்கள் கடைப்பிடித் தொழுகவுமில்லை; எந்த சம்பிரதாயத்தையும் ஏற்படுத் தவுமில்லை என ஒரு சமயம் போர்டு கூறினர். எனினும், ஒரு சம்பிர தாயத்தை அவர் ஏற்படுத்திக் கொண்டிருந்தார். மறு பரிசீலனைக்குப் பின் அவர் சொன்னர். நாங்கள் ஏதாவது சம்பிரதாயம் அனுஷ் டித்து வந்தால் அது கீழ்கண்டதாகத்தான் இருக்கும்: ஒவ்வொரு காரியத்தையும் துரிதமாகவும் சிறந்த முறையிலும் எப்போதும் செய்யமுடியும்.

இந்த ஒரு விஷயத்தைத் தவிர வேறு எதையும் எந்த மேற் பார்வையாளரும் நினைத்துப் பார்க்க முடியாது. அவ்வாறு அவர் செய்தால் அது கால விரயமே தவிர வேறில்லை. ஒவ்வொருநாள் இறுதியிலும் இலாக்காவின் உற்பத்தியை அந்த இலாக்காவிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையால் வகுத்துப்பார்ப்பார். அதுவே அந்த இலாக்காவின் அன்றைய சாதனை. இந்த சாதனை திருப்திகர மாக இருந்தால் மற்ற காரியம் ஒவ்வொன்றும் நன்ருக முடிந்ததாகக் கருதப்படும்.

காலத்தை வீண் விரயம் செய்வதை போர்டு வெறுத்தார். அவர் கூறினர்: கால விரயம் மற்ற எல்லா விரயங்களை விட மிகச்சுலப மானது, அதனைத் திருத்திச் சீர்ப்படுத்துவது மிகக்கடினம்.

ஒரு தடவை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போதே நான்கு இலைகள் உள்ள புல்லைச் சிலர் கண்டுபிடித்து விடுவதுபோல, தொழிற் சாலைக்குள் நடந்து சென்று கொண்டிருக்கும்போதே உழைப்பு,

சக்தி, தளவாட விரயத்தைக் கண்டு கொள்ளும் விசேஷ ஆற்றலை போர்டு பெற்றிருந்தார். ஒரு சமயம் ஓரிடத்தில் பலபேர்நின்று கொண்டு ஒரு எஞ்சினைப் பரீக்ஷித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் கவனித்தார். மோட்டார்காரில் எஞ்சினைப் பொருத்தும் முன்பு போர்டு கம்பெனியும் இதர மோட்டார் கம்பெனிகளும் இந்த வழக்கத்தை அனுஷ்டித்து வந்தன. நாம் ஏன் இக்காரியம் செய்யவேண்டும் என போர்டு வினவினர். தொழிலாளர்கள் பிரமித்து நின்று விட்டனர். எஜமானர் தமக்குள்ளேயே பேசிக்கொள்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

உடனே எஞ்சினீர்களிடம் விரைந்து போர்டு தெரிவித்ததாவது: எஞ்சினை நாம் சரியாகச் செய்தோமா என்பது பற்றிய நிச்சயமின்மையே அதனை நாம் பரீக்ஷார்த்தமாக ஓட்டிப் பார்ப்பதன் ஒரே காரணம். முதலில் நாம் அதனை நிச்சயப்படுத்திக் கொண்டு பரீக்ஷார்த்த ஓட்டத்தாலேற்படும் கால விரயத்தையும் பண நஷ்டத்தையும் நாம் தடுப்போமாக.

அது முதல், சரியானமுறையில் எஞ்சினை கட்டிமுடித்து அதன் அமைப்பில் குறைபாடு இல்லாமலும் அதன் ஓட்டத்தில் கோளாறு ஏற்படாமலும் இருக்கும்படி செய்தனர். இதனல், எஞ்சினைக்கட்டி முடித்தபிறகு அது சரியாக ஓடுகிறதா என்பதைப் பரீக்ஷித்துப் பார்க்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

தமது ஸ்தாபனத்தில் நடைபெறும் வேலையை மேலும் கவனித்துப் பார்த்தபோது, பூமியிலிருந்து காச்சல் பொருள்கள் பிறித்தெடுக்கப்பட்டது முதல் துவங்கும் உற்பத்தி வேலையானது உபயோகிப்போரிடம் தயாரித்த சாமானை ஒப்புவிக்கும்வரை நீடிக்கிறதென அவர் கண்டு கொண்டார். ஸப்ளை மூலாதாரங்களை துருவிப் பார்த்தபோது, வெறும் விரயத்தையே அவர்கண்டார். போர்டு முறையில்—அதாவது எஜமானர் எண்ணிய அல்லது விரும்பிய முறையில் எவரும் எக்காரியமும் செய்யாததே இந்நிலைக்குக் காரணம்.

உற்பத்தி உலகில் போர்டு மோட்டார் கம்பெனி மாபெரும் சாம்ராஜ்யமாகச் சீக்கிரம் அபிவிருத்தி அடைந்தது. கம்பெனிக்குச் சொந்தமான இரும்புச் சுரங்கங்களிலிருந்து இரும்பும் அதன் சொந்த நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து எரிபொருளும் அதன் சொந்த காடுகளிலிருந்து மரவகைகளும் அதன் சொந்த தோட்டங்களிலிருந்து ரப்பரும் அதன் சொந்த ரசாயனசாலையிலிருந்து ரசாயனப் பொருள்களும் அதன் சொந்த தறிகளிலிருந்து துணிமணிகளும் தருவிக்கப்பட்டன. போர்டு ஸ்தாபனம் இவ்வாறு சுயதேவைப்பூர்த்தி அடைந்து விட்டபோதிலும் அனுகூலமானபோது மற்ற கம்பெனிகளிடமிருந்தும் கான்ட்ராக்டர்களிட மிருந்தும் பெரும் அளவில்

'ஆர்டர்' கொடுத்துத் தனது தேவைகளைப் பெற்றுவந்தது. சப்ளை செய்வோர் அதிக விலைகோரினால், நிலைமையைச் சமாளிப்பதற்கு ஆயத்தமாகத் தேவைப்பட்ட சில பொருள்களைத்தானே செய்ய அந்த ஸ்தாபனம் பழகிக்கொண்டது.

கிரேட்லேக் முகத்துவாரத்தி லிருந்து ரௌஜ் நதிக்கரையி லுள்ள போர்ட்ஸன் துறைக்கு இரும்புக்களி கொண்டு வருவதற் கென போர்ட் ஸ்தாபனம் தனது சொந்த படகுகளைக் கட்டிக் கொண்டது. பிரயாணி ரயில் வண்டியைப் போல இப்படகுகளும் குறித்த காலத்தில் போக்கு வரத்தில் ஈடுபட்டன. சரக்குகள் குவியல், பண்டக சாலை ஆகியவற்றால் 20 கோடி டாலர் மூலதனம் முடங்கிக் கிடக்கிற தென்பதைக் கண்டதும் விரயத்துக்குக் காரண மாக விருந்த அவற்றை போர்டு ஒழித்துக் கட்டினர். பூமியிலிருந்து கச்சாப் பொருள் பிறித்தெடுக்கப் பட்டது முதல் கார் பூர்த்தியாகும் வரையி லுள்ள இடைக்காலம் பதினான்கு தினங்களி லிருந்து மூன்று நாட்கள் ஒன்பது மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. பத்து வினாடிகளுக்குள் ஒரு போர்டு கார் தயாரிக்க முடியும் என்பதிலிருந்து அந்த ஸ்தாபனத்தில் வேலை எவ்வளவு துரிதமாக, சுறுசுறுப்பாக நடைபெறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

பூர்த்தியான கார்களை ரயில் மூலம் அனுப்பி வைக்கும் விஷயத் தில் மற்ற மோட்டார் கம்பெனிகள் அனுஷ்டித்துவந்த நடைமுறைப் படி போர்டு ஸ்தாபனம் ஒரு வாகனில் ஏழு கார்கள் வீதம் சாமான்கள் ஏற்றிச் செல்லும் ரயில்வண்டியில் அனுப்பி வந்தது. ஆனால், ஒரே தினத்தில் ஆயிரம் கார்கள் பூர்த்திசெய்யப்பட்டபோது, டெட்ராயிட் என்றும் கண்டிராத அளவில் ரயில் வண்டியில் இட நெருக்கடி ஏற்பட்டது. இதைப்போல இரு மடங்கு கார்களை ஒரே நாளில் ஏற்றியனுப்ப நேர்ந்தால் என்ன ஆகும் என்பதை போர்டு சிந்திக்க லானர்.

எனவே, கார்களைப் பாகம் பாகமாகப் பிரித்து ரயில் வண்டியில் ஏற்றியனுப்பினர். கிளை நிலையங்களில் அவற்றை ஒன்று சேர்த்து முழு கார்களாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு செய்தமையால் ஒரே வாகனில் நூற்று முப்பது கார்களை ஏற்றி யனுப்ப முடிந்தது. அவர் மேலும் ஒருபடி முன்னேறிச் சென்றார். அமெரிக்கா முழுவதிலும் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்ட கிளை நிலையங்கள், பாகம் பாகமாகப் பிரித்து ரயிலில் அனுப்பப்படும் கார் பகுதிகளை மீண்டும் ஒன்று சேர்த்து முழு கார்களாக ஆக்கியதோடு சிறிதளவு உற்பத்தி வேலையிலும் ஈடுபட்டன. எனவே, டெட்ராயிட் டிலிருந்து சிறு பாகங்களையும் உறுப்புக்களையுமே ரெயிலில் அனுப்ப

வேண்டியதாயிற்று. இவை ஒழுங்கான முறையில் அடுக்கி வாகன்கள் நிரம்பி நிறைந்துவிடு மளவுக்கு அனுப்பப்பட்டன.

போர்டு சிருஷ்டித்த போக்கு வரத்து இலாக்கா இரவும் பகலும் எங்கேரமும் ரயில்வே அதிகாரிகளுக்குத் தொல்லை அளித்து வந்தது. போர்டு ஸ்தாபனத்தின் சாமான்களை ஏற்றிக் கொண்டு எந்த இடத்தி லிருந்து ஒரு வாகன் புறப்பட்டாலும் அதன் நம்பரைத் தந்தி மூலம் போர்டு சிப்பந்தி தெரிவிப்பார். முதல் ஜங்ஷனில் மற்றொரு போர்டு சிப்பந்தி தயாராக இருந்து கொண்டிருப்பார். அந்த வாகன் வந்து சேரும் நேரத்தைச் சரிபார்த்து அது மீண்டும் போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் புறப்படுகிறதா என்பதையும் கவனித்துத் தந்தி மூலம் தகவல் அளித்து விடுவார். ஒவ்வொரு ஜங்ஷனிலும், இம்மாதிரியே நடைபெறும். போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைந்ததும் அங்கும் போர்டு சிப்பந்தி யொருவர் தயாராக நின்று கொண்டிருப் பார். எந்த இடத்திலாவது ஒரு வாகன் ஒரு மணி நேரம் தாமதித்து வந்து விட்டால், அவ்விஷயம் போர்டு போக்குவரத்து இலாக்காவுக் குத் தெரிந்து விடும். இதைத் தொடர்ந்து அமளிதுமளியாக விருக்கும்.

தாம் ஏற்படுத்திய முன்மாதிரியை மீண்டும் பரிசீலித்துப் பார்த்து அதனை ஒழுங்கு படுத்தி அமைத்த பிறகு அவர் சொன்னர்: புதிய முறை லாபம் அளித்தாக வேண்டும். உற்பத்தியை ஒரு போதும் குறைக்காதே. கூலியையும் ஒருபோதும் குறைக்காதே. பொதுமக்களிட மிருந்து ஒருபோதும் அதிக விலை கேட்காதே. புதிய முறையில் மூளை, இன்னும் அதிக மூளையைச் செலுத்தி வேலை செய்.

ஹென்ரி போர்டு அவரது காலத்திலே மிகப் பிரம்மாண்டமான லாபம் சம்பாதித்துத் திரளான செல்வம் திரட்டியதன் இரகசியம் இதுதான்.

எண்ணங்கள் எங்கிருந்து உதயமாகின்றன என வினவப்பட்ட போது, தனக்கு முன்புள்ள சாய்வு மேஜையின் மீதிருந்த தட்டைப் பாத்திரத்தை தலை கிழாகக் கவிழ்த்து, அதன் அடியில் விரல்களால் தட்டிப் பின் வருமாறு பதிலுரைத்தார்: ஒரு சதுர அங்குலத்துக்கு பதினான்கு ராத்தல் வேகத்தில் இப்பாத்திரத்தை வாயு அழுத்தம் (Atmospheric pressure) தாக்கிக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இத்தாக்குதலை நீங்கள் காண்பது அல்லது உணர்வது முடியாத காரியம்; ஆனால் தாக்குதல் நிகழ்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். எண்ணங்களும் அதைப் போலவே இருக் கின்றன. காற்றிலே எண்ணங்கள் நிறைந்துள்ளன. அவை உங்கள் தலையைத் தாக்கியவண்ண மிருக்கின்றன. அதைப் பற்றி அதிகம்

நினைக்கத் தேவையில்லை. உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை மட்டும் நீங்கள் தெரிந்திருந்தால் போதும். பிறகு, நீங்கள் அதை மறந்து விட்டு உங்கள் வேலையை கவனிக்கத் துவங்கி விடுங்கள். உங்களுக்குத் தேவையான எண்ணம் திடீரென உதயமாகி விடும்.

அவரது வாழ்க்கையில் இவ்வித திடீர் ஞானோதயம் ஏற்படுவது சகஜ நிகழ்ச்சியாக விருந்தது. சிற்றுண்டி சமயத்திலே நண்பரொருவருடன் பேர்டு பேசிக் கொண்டிருந்தார். கம்பெனியின் ரேடியோ ஒலிபரப்புகளைச் செய்து வந்த வில்லியம் காமரானும் அப்போது அவர்களுடன் இருந்தார். கெட்டையான அவரது உடல் விறைத்துக் கொண்டது. தூக்கத்தில் எழுந்து நடமாடுபவனின் முகபாவனையைப் போல் அவரது முகபாவனை மாறியது. எவரிடத்திலும் "நான் அதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கவில்லை" என அவர் கூறவில்லை.

எந்த வார்த்தையும் பேசாமல் அவர் எழுந்து சென்று விட்டார். அவர் விரும்பிய ஒரு எண்ணம் உதயமாகி விட்டது. அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காக அவர் விரைந்து சென்று விட்டார். காமரான் சொன்னார் "இவ்வாறு அடிக்கடி நிகழ்கிறது. ஒரு வாரம் வரை அவரை நாம் மீண்டும் பார்க்க மாட்டோம்."

ஒரு நாள் எஞ்சினீரிங் ஆராய்ச்சிக் கூடத்திலே நண்பரொருவருடன் சுற்றி வந்த பேர்டு அவரது சொந்த அறையின் வழியாகச் செல்ல நேர்ந்தது—ஒரு எந்திர சாஸ்திரி (மெக்கானிக்)யின் கனவு நனவானது. தமது மிக விலை யுயர்ந்த பொருளை எடுத்துக் கொண்டு "எனக்கு வேண்டியது இது தான்" என அவர் கூறினார்.

(தொடரும்.)

Printed at Shahul Hameedia Press, Madras.
Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.

# மனாயிஹுல் அன்வார் பீ மதாயிஹிர் றஸூல் வல்அப்றார்

இந்த கிதாபில் நமது நாட்டில் வழக்கமாய் ஓதி வருகிற ஸஹீஹான மௌலிது, மௌலிது பர்சஞ்சி, ஹஸன் (றலி) ஹுஸைன் (றலி) மௌலிது, முஹியத்தீன் (றலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (றலி) மௌலிது, ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸெய்யதி, யாகுதுபா முதலிய அநேக விடுபைத்துகளும் அடங்கியிருக்கின்றன. ஷை மௌலிதுகளுடைய பைத்துகளெல்லாம் தடித்த கலத்தினால் பெரிய எழுத்தில் எழுதப்பட்டு போட்டோ பிளாக்கில் அச்சிடப்பட்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 6—0—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# தஸ்பீஹ் மணிகள்

எம்மிடம் பலவித தஸ்பீஹ்கள் ரொக்கத்திற்கு விற்கப் படுவதுடன் வி. பி. பி. மூலமாகவும் அனுப்பப்பட்டு வருகின்றன. தேவையுள்ளோர் கீழே குறித்த விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| மக்கா மதீனா கல்பதித்த தஸ்பீஹ்: | | ரூ. | 2—8—0 |
| ரேடியம் தஸ்பீஹ்: | | | |
| இருட்டில் பிரகாசிப்பது | சிறியது: | ரூ. | 3—4—0 |
| ஷை | நடுத்தரம்: | ரூ. | 4—0—0 |
| மரத்தால் செய்யப்பட்டது: | சிறியது: | ரூ. | 0—6—0 |
| ஷை | நடுத்தரம்: | ரூ. | 0—6—0 |
| நகல் கஹ்ருபா தஸ்பீஹ்: | | | |
| உருண்டையான மணி | சிறியது: | ரூ. | 0—8—0 |
| ஷை | பெரியது: | ரூ. | 0-12—0 |
| நீளமான மணி | சிறியது: | ரூ. | 0-14—0 |
| ஷை | நடுத்தரம்: | ரூ. | 1—0—0 |
| ஷை | பெரியது: | ரூ. | 1—8—0 |
| ஷை | மிக பெரியது: | ரூ. | 2—8—0 |
| ஒட்டகப் பல்: | சிறியது: | ரூ. | 1—8—0 |
| ஷை | நடுத்தரம்: | ரூ. | 2—8—0 |
| நகல் ஒட்டகப் பல்: உருண்டை மணி | சிறியது: | ரூ. | 0—8—0 |
| | நடுத்தரம்: | ரூ. | 0-12—0 |
| | பெரியது: | ரூ. | 0-14—0 |
| ரோஸ் நிறம் தஸ்பீஹ்: உருண்டை மணி | சிறியது: | ரூ. | 0—8—0 |
| | பெரியது: | ரூ. | 0-12—0 |
| சந்தன மரக்கட்டை தஸ்பீஹ்: | சிறியது: | ரூ. | 0-12—0 |
| ஷை | பெரியது: | ரூ. | 1—8—0 |

---

கிடைக்குமிடம் ;—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.